தேதி.25.03.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No. 31/2015 திரு.சிவக்குமார், த/பெ.நாகராஜ் வா.சா.2

<u>வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை சாட்சியமளிக்க யார் அழைத்து வந்தார்கள் என்றால் வாதி தான் அழைத்து வந்தார். நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் வரதம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். வாதி இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சொத்திற்காக அக்ரிமெண்ட் போட்டார்கள் அதற்காக வழக்கு தொடரப்பட்டுள்ளது என்று தெரியாது. வாதி எனக்கு உறவினரா என்றால் இல்லை. நான் சுவாதீனம் இல்லா கிரையப்பத்திரத்திலும், பவர் பத்திரத்திலும் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எத்தனையாவதாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் இரண்டாவதாக கையெழுத்து செய்துள்ளேன். முதலில் சாட்சி கையெழுத்து செய்தவர் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் சாட்சி கையெழுத் துசெய்துள்ள கிரையப்பத்திரத்தில் உள்ள வாசகங்களை படித்து பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். மேற்படி சுவாதீனம் இல்லா கிரையப்பத்திரம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 2012ம் தேதி அக்டோபர் மாதம் 17 அல்லது 18 தேதியா என்று சரியாக நினைவில் இல்லை. பவர் பத்திரமும், சுவாதீனம் இல்லா கிரையப்பத்திரமும் ஒரே தேதியில் எழுதப்பட்டதா அல்லது வெவ்வேறு தேதியில் எழுதப்பட்டதா என்றால்

ஒரே தேதியில் எழுதப்பட்டது. மேற்படி இரண்டு பத்திரங்களில் எந்த பத்திரம் முதலில் பதிவு செய்யப்பட்டது என்றால் கிரைய உடன்படிக்கை பத்திரம் முதலில் பதிவு செய்யப்பட்டது. யார் யாருக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் தர்மராஜ் மற்றும் அவரது தந்தை ஆகியோர்கள் கதிரேசன் என்பவருக்கு எழுதிக்கொடுத்தார்கள். கிரையப்பத்திரம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் செல்வராஜ் என்பவரின் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. பவர் பத்திரம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் செல்வராஜ் என்பவரின் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. பவர் பத்திரத்தில் உள்ள வாசகங்களை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். ஒருசில சங்கதிகள் ஞாபகம் உள்ளது. சில சங்கதிகள் நினைவில் இல்லை. பவர் பத்திரம் யார் யாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் தர்மராஜ் மற்றும் அவரது தந்தை ஆகியோர்கள் கண்ணம்மாள் என்பவருக்கு எழுதிக்கொடுத்தார்கள். கண்ணம்மாள் என்பவர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கண்ணம்மாள் என்பவர் கதிரேசனின் தாயார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுவாதீனம் இல்லாத கிரையப்பத்திரம் எத்தனை ரூபாய் முத்திரைத்தாளில் எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பவர் பத்திரம் எத்தனை ரூபாய் முத்திரைத்தாளில் எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சுவாதீனம் இல்லாத கிரையப்பத்திரம் பதிவு செய்யும் போது தர்மராஜுவின் தாயார் மற்றும் சகோதரி ஆகியோர்கள் வந்தார்களா என்றால் தெரியவில்லை. சுவாதீனம் இல்லாத கிரையப்பத்திரம் பதிவு செய்யும் போது தர்மராஜுவின் தாயார் மற்றும் சகோதரி ஆகியோர்கள் கையெழுத்து செய்யவில்லை

என்றால் சரிதான். தர்மராஜும் அவரது தகப்பனாரும் எவ்வளவு தொகைக்கு கிரையம் பேசி முடித்தார்கள் என்றால் தெரியாது. எவ்வளவு முன்பணம் பேசி முடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ரூ.2,25,000/-ம் பெற்றார்கள். தர்மராஜ் மற்றும் அவரது தகப்பனார் அட்வான்ஸ் தொகையை பெற்றவிவரம் தாயார் சம்பூர்ணம் மற்றும் சகோதரி கண்ணம்மாள் ஆகியோர்களுக்கு தெரியாது என்றால் சரிதான். கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்கும் போது நஞ்சப்ப கவுண்டருக்கு உடல் நிலை சரியில்லாமலும் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரியல்ல. அதனால் 1, 3 பிரதிவாதிகளுக்கு தெரியாமல் 2ம் பிரதிவாதியுடன் சென்று மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கிரையப்பத்திரம் எந்த ஆவணத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கிரையப்பத்திரத்தில் எத்தனை வருட கால கெடுவிற்குள் கிரையம் செய்து கொள்ள வேண்டும் என்று எழுதப்பட்டிருந்தது என்றால் இரண்டு வருட காலம் என்று எழுதப்பட்டிருந்தது. கிரையப்பத்திரத்தில் உள்ள சொத்து நஞ்சுண்ட கவுண்டருக்கு எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சுவாதீனம் இல்லாத கிரையப்பத்திரம் மோசடியாக எழுதப்பட்டது என்றும் தர்மராஜ் வாங்கிய கடனுக்காக அவரது தகப்பனாரிடம் மோசடியாக எழுதி வாங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தர்மராஜ் வாங்கிய கடனுக்காக அவரது தகப்பனாரிடம் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றும் அதனால் தான் 1, 3 பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. பவர் பத்திரம் சுவாதீனம் இல்லா கிரையப்பத்திரம் ஆகியவற்றின் முத்திரைத்தாள்கள் அன்றைய தினமே வாங்கி அன்றைய தினமே பதிவு செய்யப்பட்ட

விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நானும், 1வது சாட்சி கையெழுத்து செய்தவரும் வாதிக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் மோசடியாக தயார் செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தில் சாட்சி கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் பொது வாழ்க்கையில் இருந்து வருகிறேன். நான் பாரதிய ஜனதா கட்சியில் 35 ஆண்டுகளாக இருந்து வருகிறேன். வாதி எனக்கு நண்பர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியும் எனக்கு நண்பர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ம.தி.மு.க கட்சியில் 25 ஆண்டுகளாக உள்ளார் என்றால் சரிதான். வாதி சாட்சியமளிக்க கேட்டுக்கொண்டதின் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் ரங்கசமுத்திரம் கிராமத்தில் உள்ளது. அதன் சர்வே எண், விஸ்தீர்ணம் மற்றும் அதன் நான்குபுற செக்குபந்தி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் நீளம் மற்றும் அகலம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து எத்தனை சதுரடி என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து காலியிடமா அல்லது வீடு உள்ளதா என்றால் ஓட்டு வீடு உள்ளது. அதன் மின் இணைப்பு எண், கதவு எண் மற்றும் வரி விதிப்பு எண் ஆகியவைகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து யார் விலைக்கு கொடுப்பதாக சொன்னது என்று எனக்கு நேரடியாகத் தெரியுமா என்றால் தெரியாது. வாதி தாவா சொத்தை யாரிடம் விலைக்கு பேசினார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சொத்தின் உரிமையாளர் என்ன விலைக்கு சொன்னார்

என்ன விலைக்கு கேட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கையில் சாட்சி கையெழுத்து செய்ததும், ரூ.2,25,000/−ம் அட்வான்ஸ் வாங்கிய விவரம் மட்டும் தான் தெரியும் என்றும் மற்ற விவரங்கள் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கையின் முத்திரைத்தாள் எப்போது வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உடன்படிக்கை எப்போது தயார் செய்யப்பட்டது என்றால் 18ம் தேதி அக்டோபர் மாதம் 2012ம் தேதியாகும். அன்றைய தினம் தான் சாட்சிகையெழுத்து செய்தேன் என்றால்சரிதான். அதன் பின்னிட்டு சொத்து குறித்து வேறு சாட்சி கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். ரூ.2,25,000/−ம் அட்வான்ஸ் கொடுத்தவருக்கு மீதமுள்ள ரூ.25,000/−ம் ரூபாய்க்கு இரண்டு வருட காலக்கெடு எதனால் கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கிரைய உடன் படிக்கை செய்யப்பட்டபோது வாதிக்கு என்ன என்ன ஆவணங்கள் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அது குறித்து என்ன பேசிக்கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கடனுக்காக என்பதால் தான் இரண்டு வருட காலக்கெடு போடப்பட்டுள்ளது என்றும், கடனுக்காகத்தான் கிரைய உடன்படிக்கை செய்யப்பட்டது என்றும் வாதி கேட்டுக்கொண்டதின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடனுக்காக எழுதப்பட்டதால் தான் வாதியின் தாயார் பெயரில் ஜெனரல் பவர் பத்திரமும் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் எனக்கு தெரிந்ததனால் தான் இரண்டிலும் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றும் தற்போது அதை மறைத்து பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எனக்கு நண்பர் என்றால் சரிதான். வாதியும், 2ம் பிரதிவாதியும் நண்பர் என்பதால் தான் கடன் கேட்கும்போது முன்நின்று செய்து கொடுத்துள்ளேன் என்றும், கிரைய உடன்படிக்கை கடனுக்காக எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனவே வழக்கு 2ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.